IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
**OS.No.39/2020**

| DEPOSITION OF WITNESS | PW.1 |
|---|---|

| NAME | லதா |
|---|---|

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of **29.08.2024**

**<u>1,2,4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>**

1. இந்த வழக்கில் 7 பேருக்கு எதிராக கணேஷ், சுப்பிரமணி, குப்பன், பன்னீர்செல்வம், ஜெயகுமார், பழனி, முனிரத்தினம் ஆகியோர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்படடுள்ளது.

2. இவர்கள் எனது தெருவை சேர்ந்தவர்கள். பிரதிவாதிகள் 7 பேரும் தனித்தனி குடும்பம் ஆகும். எனது கணவர் பெயர் ராமலிங்கம் ஆவார். அவர் இந்நீதிமன்றத்திற்கு வந்துள்ளார்.

3. எனது கணவர் இவ்வழக்கின் பிரதவாதிகள் சிலருக்கு எதிராக ஏற்கனவே வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கு நாங்கள் வராததால் தள்ளுபடி ஆகிவிட்டது. எங்கள் நிலத்தின் சாக்கடை தண்ணீர் விட முயற்சி செய்வதால் அதை தடுப்பதாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தின் சர்வே எண்.1156 அதன் உட்பிரிவு 3 ஆகும். புதிய சர்வே எண் எனக்கு தெரியாது.

4. என்னிடம் காண்பிக்கபம்படும் கையெழுத்து எங்களுடையது அல்ல. பிரதிவாதிகள் வீடுகளுக்னகு அருகாமையில் குடியாத்தம் –புவனேஸ்வரிபேட்டை–போடி பேட்டை செல்லும் சாலை உள்ளது என்றால் சரிதான். இந்த சாலை கிழக்கு மேற்கு சாலை என்று எனக்கு தெரியாது. புவனேஸ்வரிபேட்டை–போடி பேட்டைக்கு தெற்கு பக்கமாக உள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அதன் திசை எனக்கு தெரியாது. அந்த சாலையிருந்து சந்து வழியாக தான் பிரதிவாதிகள் வீடுகள் 2 பக்கங்களிலும் உள்ளது. அந்த வடக்கு தெற்கு சந்து என்றால் எனக்கு தெரியாது.

5. அந்த சந்து ஆரம்பம் ஆவது புவனேஸ்வரிபேட்டை–போடி பேட்டை சாலையிலிருந்து முடியும் இடம் ஆறு என்றால் சரிதான். பிரதிவாதிகள் குடியீருக்கும் அனைத்து இடமும் எனது மாமனார் மனை பிரிவுகளாக பிரித்து விற்கப்பட்ட இடம் என்றால் சரிதான்.

6. எனது மாமனார் பெயர் பெருமாள். எனது மாமனாரின் தந்தை பெயர் வெள்ளய செட்டி என்றால் சரிதான. வெள்ளைய செட்டிக்கு எனது மாமனார் பெருமாள், சுந்தரம் முருசேகன், கிருஷ்ணன், கோவிந்தராஜன், நடராஜன், ராஜம்மாள், மாணிக்கம்மாள், ஜெயம்மாள் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான்.

7.வெள்ளைய செட்டி இறந்த பின்பு எனது மாமனாரும் அவரது சகோதர சகோதிக்கு இடைளே 07.05.1977 அன்று பாகபிரிவினை செய்து எகொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பாகபிரிவினையில் எனது மாமனாருக்கு "பி" அட்டவணை சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

8. சர்வே எண். 1154/1 ல் 4 செண்ட் வீட்டு மனையும், 40 செண்டும் நிலமும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

9. இந்த இடத்தில் பிரதிவாதிகள் வீடுகள் உள்ளது என்றால் சரிதான. சர்வே எண்.1156/3 ல் 10.75 செண்ட் நிலம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

10 இந்த நிலத்திற்கு அருகாமையில் உள்ள நிலங்கள் எனது மாமனாரின் சகோதர சகோரீகளுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண்.1154 ல் உள்ள எல்லா சொத்துகளும் விற்கப்பட்டது என்றால் சரியல்ல. 4 செண்ட் மனை உள்ளது. 40 செண்ட் நிலத்தில் 2 மனைகள் வீடுகள் உள்ளது. மற்ற மனைகளை விற்பனை செய்துனவிட்டோம்.

11. சர்வே எண்.1154 ற்கு வழக்கு தாக்கல் எதுவும் செய்யவில்லை எனறால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்தின் சர்வே எண்.1156 ஆகும். சர்வே எண். 1156/3 ல் 10.75 செண்ட் நிலம் என்றால் சரிதான. இந்த 10.75 சென்ட் நிலத்தில் விற்பனை செய்யவில்லை எனது கணவரின் சகோதர, சகோதரிகளுக்கு இடையே பாகபிரிவினை செய்யப்பட்டது.

12. எனது கணவரின் உடன்பிறந்தவர்கள் வரலட்சுமி, கலாராணி மற்றும் விஸ்வநாதன் என்பவர் திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார். எனது மாமியார் தற்போது உயிருடன் இல்லை. இந்த 10.75 சென்ட் நிலத்தில் நானும் எனது கணவரின் சகோதரிகளுக்கு இடையே பாகபிரிவினை செய்து கொண்டதற்கு ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

13. 2004 ல் பாகபிரிவினை செய்யப்பட்டது. தேதி மற்றும் மாதம் நியாபகம் இல்லை. அதில் யார் யாருக்கு எவ்வளவு நிலம் ஒதுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. ஆவணம் எழுதி தான் பாகபிரிவினை செய்துகொண்டார்கள். பாகபிரிவினை பத்திரம் என்னிடம் உள்ளது. அந்த பாகபிரிவினை பத்திரத்தில் யார் யாருக்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டது என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான்.

14. பிரதிவாதிகள் தாவா சொத்தானது சாலை என்றும், எங்களுக்கு உரிமை இல்லை என்று சொன்னதால் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இது சம்பந்தமாக 5 , 6 வருடமாக காவல் துறை மற்றும் நகராட்சியிடம் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான்.

15. பிரதிவாதிகள் நகராட்சியிடம் தாவா சொத்து தெரு என்றும் அதை நாங்கள் ஆக்கிரமிப்பதாக புகார் கொடுத்தார் என்றால் சரிதான். காவல் நிலையத்திலும் புகார் கொடுத்தார் என்றால் சரிதான்

16. இந்த பிரச்சனைகள் உள்ள போது விளம்புகை பரிகாரம் கேட்காமல் நிரந்தர உறுத்துக்கட்டளை மட்டும் கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளது தவறு என்றால் சரியல்ல. சர்வே எண்.1156/3 ல் 10.75 சென்டில் எங்களுக்கு ஒதுக்கப்பட்டது மற்றவர்களுக்கும் அதில் நிலம் ஒதுக்கப்பட்டது. சர்வே எண். 1156/3 ல் 65 செண்ட் நிலம் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

17. சர்வே எண். 1156/3 உள்ள மற்றவர்கள் மனை பிரிவுகளாக பிரித்து விற்பனை செய்துவிட்டார்களா என்றால் சிலவற்றை விற்பனை செய்து விட்டார்கள் மொத்தமாக விற்பனை செய்து விட்டார்கள் என்று எனக்கு தெரியாது. சர்வே எண். 1154/1 யை மனைபிரிவுகளாக பிரித்து எனது மாமனார் விற்பனை செய்துவிட்டார் என்றால் சரிதான். அந்த மனைபிரிவுகளாக பிரிக்கப்பட்டதற்கு உண்டான வரைபடம் என்னிடம் உள்ளது என்றால் இருக்கலாம் அதை பற்றி எனக்கு தெரியவில்லை.

18. நீதிமன்றத்தில் பிரதிவதாதகள் தரப்பில் எதிருரையுடன் மனைபிரிவுகள் எப்படி அமைந்துள்ளது என்று மாதிரி வரைபடம் தாக்கல் செய்தார்கள் என்றால் தாக்கல் செய்தார்கள். ஆனால் அது தவறாக உள்ளது. மேற்சொன்ன மாதிரி வரைபடம் தவறாக உள்ளது என்றும் எந்த வகையில் தவறாக உள்ளது எனற்று குறித்து எனது முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன மாதிரி வரைபடத்தில் அளவுக்ள சரியானது என்றும் நான் வழக்குகாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

19. மாதிரி வரைபடத்தில் உள்ளது தவறு என்று குறிப்பிடுவதால் என்னிடம் உள்ள எனது மாமனார் தயார் செய்த வரைபடத்தை தாக்கல் செய்தால் உண்மை தெரியவரும் என்றால் என்னிடம் அந்த வரைபடம் உள்ளதா என்று எனக்கு தெரியாது.

20. எனது கணவரின் சகோதரிகளுக்கு இடையே ஏற்பட்ட பாகபிரிவினை பத்திரத்தை தாக்கல் செய்தால் தாவா சொத்தில் தெரு உள்ளதா என்று விவரம் தெரிய வரும் என்றால் சரிதான். அந்த பத்திரத்தை தாகா்ல் செய்தால் உண்மை தெரியவரும் என்பதால் அந்த பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது மாமனார் மனைபிரிவுகளாக பிரித்த வரைபடம் என்னிடம் உள்ளது என்றாலும் அதை தாககல் செய்தால் உண்மை தெரியவரும் என்பதால் அதை என்னிடம் இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

21. நான் வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்து தெருவின் கடைசி என்றால் சரிதான். தெருவின் சர்வே எண்.1154 ஆகும். நான் தாக்கல் செய்துள்ள தாவா சொத்தானது இன்றைய தேதி வரையிலும் தெருவாக தான் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து காலி மனையாகதான் உள்ளது அதில் மரங்கள் வைத்துள்ளேன். எனது தாவா சொதத்தின் மரம் உள்ளதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் பெளதீக தன்மையை காண்பிப்பதற்கு நீதிமன்ற ஆணையரை நியமித்து ஏதேனுமத் அறிக்கை தாக்கல் செய்துள்ளனரா என்றால் இல்லை.

22. நீதிமன்ற ஆணையரை நியமித்து தாவா சொத்தின் உண்மை தெரியவரும் என்பதால் அதை செய்யவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் இங்கு இருப்பதால் பிரதிவாதிகள் அதில் கால்வாய் அமைத்து பயன்படுத்தினால் அது அவர்களுககு சொந்தமாகிவிடுமா பிரதிவாதிகள் வாங்கியுள்ள் எல்லா மனைகளும் தாவா சொத்துகள் சாலையாக தான்

காண்பிக்கபட்டுள்ளது என்றால் சரியல்ல. வரலட்சுமி எனது கணவரின் சகோதரி ஆவார். வரலட்சுமி அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை விஜி கவுண்டர் என்பவருக்கு விற்பனை செய்துவிட்டார் என்றால் சரிதான்.

23.சர்வே எண்.1156/3 ல் தாவா சொத்தை எங்களுக்குள் பிரித்து கொண்டோம் யாருக்கும் விற்பனை செய்யவில்லை என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல.

24. என்னிடம் காட்டப்படும் ஆவணம் வரலட்சுமி விஜி கவுண்டருக்கு விற்பனை செய்யப்பட்டது என்றால் சரிதான. அவை பி.சா.ஆ.1 ஆக வாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. சர்வே எண். 1156/3 ல் 10.75 செண்ட் நிலத்திற்கு உண்டான சொத்து என்றால் சரிதான. தாவா சொத்து எம்.ஜி.ஆர் நகர் 3 வது தெருவில் உள்ளது என்றால் சரிதான், பிரதிவாதிகளின் வீடுகள் எம்.ஜி.ஆர் நகர் 3 வது தெருவில் தான் உள்ளது என்றால் சரிதான. பி.சா.ஆ.1 எம்.ஜி.ஆர் நகர் 2 வது தெரு வில் உள்ளது. நான் சொல்வது தவறு என்றாலும் பி.சா.ஆ.1 பத்திரத்தில் எம்.ஜி.ஆர் நகர் 3 வது தெரு தான் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.1 ல் தெருவிற்கு கிழக்கு பக்கத்தில் என்ற குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான. அந்த தெரு சர்வே எண். 1154 ஆகும். அந்த பத்திரத்தில் தெரு சர்வே எண். 1154 என்று குறிப்பிட்டுள்ளதா என்றால் குறிப்பிடவில்லை. அந்த பத்திரத்தில் சர்வே எண். 1156/3 மட்டும் தான் குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த மனை சர்வே எண். 1156/3 உள்ளதால் அப்படி குறிப்பிட்டுள்ளது.

25. தாவா சொத்தை அபகரிக்க காரணத்தோடு இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது மாமனார் வீட்டு மனைகள் பிரிக்க்படடபொழுது தெருவாக இருந்த இடத்தை நான் அபகரிக்க இவ்வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. சுமார் 50 வருடமாக எம்.ஜி.ஆர் நகர் 3 வது தெருவில் உள்ளவர்கள் தெருவாக பயன்படுத்தி கொண்டு கால்வாய் அமைத்து உள்ளது என்றால் சரியல்ல.

26. வா.சா.ஆ.7 ல் நான் கொடுத்த புகாரில் மனுதாரருக்கு சொந்தமான நிலத்தில் சாக்கடை நீர் வருவதை மனுதாரர் தடுத்த போது சண்டை வருவதாக புகார் கொடுக்கப்பட்டதால் தாவா சொத்தில் கால்வாய் உள்ளது எனைற்று ஒப்புக்கொண்டுள்ளனே் என்றால் சரியல்ல.

27. இந்த வழக்குமூலம் பொய்யானது என்றால் எனது தாவாவிலும், முதல் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானவை என்பதால் தாவாவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

Sd/- **Thiru.M.N.Rajanandhivarmasiva**
**District Munsif,**
**Gudiyattam.**